ரம்பேவ பிரதேச சபை - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ரம்பேவ பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ரம்பேவ பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	தேசிய வாசிப்பு மாதத்திற்காக நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசாக வழங்கப்பட்ட ரூபா 59,879 ஆன புத்தக இருப்பு பிரதேச சபை நூலக புத்தக இருப்பின் கீழ் காண்பிக்கப்பட்டமையால் அப் பெறுமதியால் இருப்பு அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றோம்.	சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

(ஆ)	நிதிக்கூற்றுக்களில் ரூபா 18,000 ஆன நிலுவை சுற்றாடல் அனுமதிப் பத்திர வருமானம் காண்பிக்கப்பட்ட போதும் சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தின் பிரகாரம் அண்ணளவாக 95 கைத்தொழில்களுக்கு உரிய ரூபா 427,500 ஆன நிலுவை சுற்றாடல் அனுமதிப் பத்திர வருமானம் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் ரூபா 409,500 ஆக நிலுவை சுற்றாடல் அனுமதிப் பத்திர வருமானம் இனங்காணப்படாமல் அந்த அளவினால் நடைமுறைச் சொத்துக்கள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	சுற்றாடல் பதிவேட்டின் பிரகாரம் உள்ள கைத்தொழில்களில் எஞ்சிய கைத்தொழில்களுக்காக 2025 ஆம் ஆண்டில் உரிய அனுமதிப் பத்திரத்தை விநியோகித்து வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை சுற்றாடல் அனுமதிப்பத்திர வருமானத்தை இனங்கண்டு சரியாகக் கணக்கீடு செய்ய வேண்டியிருந்ததுடன் நிலுவையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
நீதிமன்ற தண்டப்பணம் கிடைக்க வேண்டிய ஆரம்ப மீதி ரூபா 2,411,916 ஆக இருந்த போதும் நீதிமன்ற தண்டப் பணப் பதிவேட்டில் ரூபா 3,029,667 ஆக காண்பிக்கப்பட்டமையால் ரூபா 617,751 வேறுபாடு காணப்பட்டது.	ஏற்றுக்கொள்கின்றோம்.	நீதிமன்ற தண்டப்பண பதிவேட்டை நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
கூட்டுப் பெறுமதி ரூபா 439,553 ஆன 06 கணக்கு விடயங்களுக்கு உரிய பட்டோலைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்காமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது.	எந்த ஒரு சான்றையும் கண்டறிவதற்கு முடியாதிருந்தமையால் எதிர்காலத்தில் விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்துடன் இந்த மீதிகளைப் பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உறுதிப்படுத்துகின்ற எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமானங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 147 ஆம் பிரிவு	இந்தப் பிரிவின் கீழான பணிகளுக்காக கட்டணம் அறவிடப்பட்டிருந்த போதும் அதற்குரிய நிபந்தனைகளை உள்ளடக்கிய அனுமதிப் பத்திரம் உரிய நிறுவனங்களுக்கு விநியோகிப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்க வில்லை.	எதிர்காலத்தில் கட்டணங்களை அறவிடுகின்ற சந்தர்ப்பத்தின் போது அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 761	2024 திசெம்பர் 31 ஆந் திகதயில் முடிவடைந்த ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை மேற்கொண்டு இந்த அறிக்கை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.	ஏற்றுக் கொள்கின்றோம்.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 3,422,311 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 10,685,007 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	வருமானமான மூலம்	2024 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	2024 சிட்டையிடப் பட்ட வருமானம்	2024 சேகரிக்கப்பட்ட வருமானம்	2024 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	2023 சிட்டையிடப் பட்ட வருமானம்	2023 சேகரிக்கப்பட்ட வருமானம்	2023 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
i.	ஆதன வரியும் வரியும்	2,471,502	1,733,351	1,770,841	1,331,236	2,471,502	1,881,326	2,204,794	3,098,448
ii.	வாடகை	15,561,000	7,849,330	9,541,542	2,446,142	15,561,000	8,043,815	8,172,475	5,785,490
iii.	அனுமதிப்பத்திரக் கட்டணம்	2,038,620	940,100	953,270	412,000	2,038,620	1,104,910	755,650	1,455,260
iv.	ஏனைய வருமானம்	48,150,802	43,958,208	49,878,095	5,375,993	8,150,802	7,963,248	7,707,012	2,791,324
	மொத்தம்	68,221,924	54,480,989	62,143,748	9,565,371	28,221,924	18,993,299	18,839,931	13,130,522

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ) வீதவரியும் வரியும்		
(i) 570 ஆதனவரி அலகுகளுக்கு இடையே 134 அலகுகளுக்கு உரிய ரூபா 597,056 ஆன ஆதனவரி மீளாய்வாண்டின் இறுதியின் போது சபைக்கு அறவிட வேண்டியிருந்ததுடன் ஆதனவரிப் பதிவேடு நாளதுவரையாகப் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் நிலுவை ஆதன வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நடப்பாண்டில் ஆதனவரி மற்றும் நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii) சபையினால் 118 நிறுவனங்களுக்கு உரியதான ரூபா 283,200 ஆன கழிவுப் பொருள் கட்டண வருமானம் அறவிடப்படாது இருந்ததுடன் கழிவுப் பொருள் கட்டணத்திற்காக பதிவேடும் சபையினால் பேணிச் செல்லப் பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டில் கழிவுப் பொருள் வருமானத்தை பரீட்சிப்பதன் மூலம் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் கழிவுப் பொருள் கட்டணத்திற்காக பதிவேடு தற்போது பேணிச் செல்லப்படுகின்றது.	நிலுவை வருமானத்தை சேகரிக்கும் பதிவேடு நாளது வரையாக்கப்படல் வேண்டும்.

(ஆ) அனுமதிப் பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டின் இறுதி வரையில் கைத்தொழில் வரி ரூபா 275,300 தொகை, வியாபார வரி ரூபா 425,880 மற்றும் வியாபார அனுமதிப் பத்திரம் ரூபா 234,000 என்பன அறவிட வேண்டி இருந்தது.	நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடமாடும் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தி நிலுவை வருமான மீதிகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ) ஏனைய வருமானம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்து, ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்ததும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,405,243 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 2,687,550 அறவிடப்பட்டிருக்கவில்லை.	இந்த தொகையை விடுவிப்பதற்கு ஆளுநரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உபவிதிகள் விதிக்க வேண்டியிருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த விடயங்களுக்காக உபவிதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கின்றோம்.	உபவிதிகளை விதித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 வெளிப்படையான மோசடிகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2023 திசெம்பர் மற்றும் ஒக்தோபர் மாதங்களில் நாளாந்தம் கிடைத்த பணம் சபை நிதியத்தில் செலவு வைக்கப்படாமல் மோசடி செய்தல் தொடர்பாக காசாளர் பதவியில் கடமையாற்றிய உத்தியோகத்தரின் வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 367,866 தொகை சபைக்கு அறவிட வேண்டிக் காணப்பட்ட போதும் அந்தப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.	உள்ளூராட்சித் திணைக்களத்தின் புலனாய்வு உத்தியோகத்தர்களால் ஆரம்ப ஒழுக்காற்றுப் பரிசோதனை மேற்கொண்டு முடிவடைந்திருந்த போதிலும் இதுவரை இறுதி அறிக்கை கிடைத்திருக்க வில்லை.	விவைாக அறிக்கையைப் பெற்று ஒழுக்காற்று நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்.

3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	95 வியாபார அலகுகளுக்கு இறுதித் தடவையாக சுற்றாடல் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருந்த 2010 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியின் போது சபையினால் எழுத்து மூலம் அறிவித்து 03 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை விநியோகித்து வருமானத்தை சேகரிப்பதைப் போன்று சட்ட ரீதியான விடயங்களுக்கு இணங்காமைக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	சுற்றாடல் அனுமதிப் பத்திர பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட மிகுதி கைத்தொழல்களுக்கான சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை விநியோகிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் இந்த ஆண்டில் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறாத நிறுவனங்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	வளவாஹெங்குனுவெவ நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் மற்றும் பிரதேச சபைக்கு இடையிலான உடன்படிக்கையின் பிரகாரம் மாதாந்த நீர் விற்பனை வருமானத்தில் 30 சதவீத அளவு பிரதேச சபைக்கு அனுப்ப வேண்டியிருந்த	அறவிட வேண்டிய தொகையை சரியாக இனங்கண்டு அறிவுடுதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் சபையின் மூலம் நடாத்திச் செல்லப்படுகின்ற நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் பொருத்துவதற்கு எதிர்	மிகவும் வினைத்திறனான நடவடிக்கைகள் பின்பற்றப்படல் வேண்டும்.

	போதிலும் அந்த வருமானம் பெற்றுக் கொள்வதற்கு அதாவது வருமானம் எவ்வளவு அளவு என இனங்காண்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே நமடகஸ்வெவ நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் நீர் அருந்துவதற்கு பொருத்தமற்றதாக அறிவிக்கப்பட்டிருந்தமையால் அது விளைவற்றுக் காணப்படுவதுடன் வடிக்கும் இயந்திரம் மற்றும் கட்டிடங்களை ஆக்கபூர்வமான பயன்படுத்துவதற்காக பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	
(இ)	2019 ஆம் ஆண்டு முதல் கொண்டு வரப்படுகின்ற வாகன நிலுவை வாடகை ரூபா 2,100,425 இனை அறவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	நிலுவை வாகன வாடகை வருமான தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும்	நிலுவை வாகன வாடகையை அறவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
பிரதேச சபைக்கு உரிய பழைய நூலகக் கட்டிடத்தை நவீன மயப்படுத்துவதற்கு உரிய 2017 திசெம்பர் 25 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்ட வேலைப் பகுதிக்காக ரூபா 2,917,338 செலுத்தப்பட்டிருந்த போதும் அந்த கட்டிடத்தை பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலையில் பூர்த்தி செய்யப்படாது இருந்தமையால் விளைவற்றுக் காணப்படுவதுடன் அதற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினர்களில் இருந்து சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பிரதம அமைச்சுக்கு செயற்திட்ட முன்மொழிவு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் குழு ஒன்று நியமித்து விசாரணை ஒன்று மேற்கொண்டு நட்டம் தொடர்பான தீர்மானத்தை எடுப்பதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	பயன்பாட்டிற்கு எடுக்கக் கூடிய பிரகாரம் பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் முறையான விசாரணை மேற்கொண்டு நட்டம் அறவிடப்படல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த கூட்டுமொத்தமான ரூபா 1,600,000 ஆன 03 செயற்திட்டங்களின் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	அந்த 03 செயற்திட்டங்களும் ஆண்டின் போது கௌரவ பொதுச் சபைக்கு சமர்ப்பித்து அதன் பரிந்துரையின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	வருடாந்தப் பாதீட்டுக்கு இணங்கும் வகையில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்க வேண்டி இருந்ததுடன் நிறைவேற்ற முடியாத பணிகள் உள்ளதாயின் திட்டம் திருத்தப்படல் வேண்டும்.